**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No.**396/2018

**Deposition of**: **PW**3(**LW**4)

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அருள்மொழி | **Father Name** : | |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act** 44 **of** 1969 **Date**: 06-02-2023 **at** 1. **a.m to** 11. **am**

**எதிரிகள் 1 முதல் 7 வழக்கறிஞருடன் நீதிமனறத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் சதாசிவபுரம் வடக்கு காட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும்தெரியும். 21-9-2014 அன்று இரவு 11-00 மணியளவில் என்னுடைய கணவர் அ.சா.2 லாரி வேலைக்கு சென்று வீடு திரும்பியிருந்தார். நாங்கள் அனைவரும் சாப்பிட்டு விட்டு துாங்கி கொண்டிருந்த போது , தேவடியா பையா, கண்டாஓழி பையா என்று சொல்லி வெளியே வாடா என்று சத்தம் கேட்டது என் கணவர் வெளியே சென்றார் நானும் என் மாமியார், மாமனார் ஆகியோர் பின்னாடியே சென்றோம். அப்போது ஜெயமணி என்பவர் கம்பியால் என் கணவரின் தலையின் முன் பகுதியை தாக்கினார். இடது கை தோள்பட்டை, மணிக்கட்டு ஆகிய இடத்தில் தாக்கி காயம் ஏற்பட்டது . என் மாமனார் என் கணவர் அடிப்பதை விலக்க அப்போது சின்னத்தம்பி என்பவர் இரும்பு கம்பியால் என் மாமனாரை தாக்கினார். அதே போல் அவரையும் உடம்பில் மாறி மாறி அடித்தார். ஆஜர் எதிரிகள் கும்பலாக என் கணவரையும் மாமனாரையும் தாக்கினார்கள். அதேபோல் என்னையும் என் மாமியாரையும் கையாலும் காலாலும் தாக்கி எட்டி உதைத்து காயம் எற்படுத்தினார்கள்.

பிறகு என் மாமனாரை தரதரவென இழுத்து சென்று கிணற்றில் போட்டு விட்டார்கள். என் மாமனாருக்கு நீச்சல் தெரியாததால் அவர் கதை முடிந்து விட்டது என்று சொல்லிவிட்டு எதிரிகள் சென்றனர். பிறகு நாங்கள் சத்தம் கேட்டு கிணற்றுக்கு சென்றோம்., என் மாமனார் பைப்பை பிடித்துக்கொண்டிருந்தார். பெண்களான எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை., பிறகு 101 க்கு போன் செய்தோம். பிறகு அவர்கள் 108 ஐ வரவழைத்தனர். பிறகு அனைவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>**

1)நான் சுமார் 4 நாட்கள் ஆத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் சொன்ன விவரத்தைதான் மருத்துவர் குறித்துக் கொண்டார் என்றால் சரிதான். 24-9-2014ம் தேதியன்று காவல் துறையினர் என்னை விசாரிக்கும்போது மடிக்கணிணியில் தட்டச்சு செய்துகொண்டார்கள். என்னுடைய வாக்குமுலத்தை நான் படித்துப் பார்த்தேன். அதில் காவல்துறையினர் மடிக்கணிணியில் தட்டச்சு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது .மேற்படி நான் சொல்லும் சம்பவத்திற்கு முன்பே 5ம் எதிரி துரைசாமி மருத்துவமனைக்கு சென்று விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. துரைசாமி என்பவர் சாட்சி அடையாளம் காட்டி அவருக்கு திருமணம் ஆகிவிட்டதாக சொல்கிறார். 1ம் எதிரியும் 5ம் எதிரியும் என் மாமியாரின் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நாங்கள் 5ம் எதிரியை தாக்கியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பொய் வழக்கு. ஆனால் அதில் நாங்கள் முன் ஜாமீன் பெற்றோம். ஂ

2) இவ்வழக்கிற்கு முன்பு 1ம் எதிரி கடன் கொடுத்ததன் தொடர்ச்சியாக என் கணவர் மற்றும் மாமனார் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்து அவர் கடன் கொடுத்த சாந்தி என்பவருக்கு அந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்த வகையில் அது செல்லாது என என் கணவர் அவர்களுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி என் நிலத்தை 1ம் எதிரிதான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். 5 ம் எதிரி எங்கள் நிலத்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . மேற்படி நாங்கள் 1 ,5 எதிரிகளை தாக்கிவிட்டதாலும், அதிலிருந்து தப்பிப்பதற்காகவும், மேற்படி சிவில் வழக்கில் சாதகமாக தீர்ப்பு பெறவேண்டி மேற்படி இவ்வழக்கை நாங்கள் பொய்யாக தயாரித்து தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அது பொய்யானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை.. இல்லை,

**" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."**

**Sd/- K.Ananthan**
**ASSISTANT SESSIONS JUDGE,**
**Attur.**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR

**SC.No.**396/2018

**Deposition of: PW**4(**LW**3)

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜானகி | **Father Name** : | |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act** 44 **of** 1969 **Date**: 06-02-2023 **at** 12.19 **p.m to** 12.35**pm**

**எதிரிகள் 1 முதல் 7 வழக்கறிஞருடன் நீதிமனறத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் சதாசிவபுரம் வடக்கு காட்டில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ தேதி ஞாபகமில்லை. நானும் என் கணவர், மகன், மருமகள், மற்றும் இரண்டு பேரக்குழந்தைகளுடன் நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தோம், எங்களுக்கு ஒரு ஏக்கர் 82 செண்ட் நிலம் உள்ளது. நாங்கள் நிலத்தின் மீது கடன் பெற்று பிறகு மீட்டுக்கொள்வோம். 1 ம் எதிரி என் உடன் பிறந்த சகோதரர். 18 மாதம் வாய்தா போட்டு என் மகன் 1 ம் எதிரியிடம் ரூ 4 லட்சம் கடன் வாங்கினார். 1 ம் எதிரி எங்கள் சொத்தை சாந்தி என்பவருக்கு எங்களுக்கு தெரியாமல் கிரையம் செய்து கொடுத்து விட்டார். ஏன் கிரையம் செய்தீர்கள் என்று நாங்கள் தான் கடனை திருப்பி செலுத்துகிறோம் என்று சொன்னோம். உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள் என்று சொன்னார். பிறகு எங்களை வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னார்.

2)1 ,5 ம் எதிரிகள் என் உடன் பிறந்தவர்கள். அவர்கள் அடிக்கடி நிலத்திற்கு வந்து வெளியே போங்கள் என்று சொல்வார்கள். என் மகன் நாங்கள் சாப்பிட்டுவிட்டு தூங்கி கொண்டிருந்தபோது தேவடியா பையா,கண்டார ஓழி பையனே என்று திட்டி வெளியே வாடா என்று சொன்னார்கள். என் மகன் வெளியே வந்தார் . அவர்களுடன் நாங்கள் அனைவரும் வந்தோம். அப்போது 1 ம் எதிரி என் மகனை இரும்புக் கம்பியால் தலையில் தாக்கினார். பிறகு இடது கை தோள்பட்டை, மணிக்கட்டு ஆகிய இடங்களில் தாக்கினார்கள். என் மகனை அடிக்கிறார்கள் என என் கணவர் வந்து தடுத்தார். அப்போது சின்னத்தம்பி என்பவர் இரும்பு ஆங்கிலால் என் கணவரின் இடது கை தோள்பட்டை, நெஞ்சில் தாக்கினார். அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் அனைவரையும்

தாக்கினார்கள். எங்களுக்கு வேறு யாரும் உதவிக்கு இல்லை. பிறகு என் கணவரை அடித்து தரதரவென இழுத்து சென்று கிணற்றில் தூக்கி எறிந்து விட்டார்கள். அவ்வளவுதான் ஈஸ்வரன் கதை முடிந்து விட்டது என வழக்கை நடத்த இனி ஆள் இல்லை என சொல்லிக்கொண்டு சென்றார்கள். என் கணவருக்கு நீச்சல் தெரியாது.

3) கிணற்றை சென்று நாங்கள் பார்த்த போது காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என என் கணவர் கத்திக்கொண்டு பைப்பை பிடித்துக்கொண்டிருந்தார். பிறகு தீயணைப்பு துறைக்கும் அ தன் பிறகு ஆம்புலன்சிற்கும் போன் செய்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்., காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)**

சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து அரசு மருத்துவமனையில் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.எங்கள் வீட்டிற்கும், கிணற்றுக்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும்., அதற்குசெல்ல வடக்கு சென்று கிழக்கில் செல்லவேண்டும். மேற்படி பொது அதிகார பத்திரத்திற்கு முன்பு 1 ம் எதிரியிடம் கடன் பெற்றது சம்மந்தமாக எவ்வித பதிவு ஆவணமும் நாங்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

இவ்வழக்கிற்கு முன்பு 1 ம் எதிரி கடன் கொடுத்ததன் தொடர்ச்சியாக என் கணவர் மற்றும் மாமனார் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்து அவர் கடன் கொடுத்த சாந்தி என்பவருக்கு அந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்த வகையில் அது செல்லாது என என் கணவர் அவர்களுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி என் நிலத்தை 1 ம் எதிரிதான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். 5 ம் எதிரி எங்கள் நிலத்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . மேற்படி நாங்கள் 1 ,5 எதிரிகளை தாக்கிவிட்டதாலும், அதிலிருந்து தப்பிப்பதற்காகவும், மேற்படி சிவில் வழக்கில் சாதகமாக தீர்ப்பு பெறவேண்டி மேற்படி இவ்வழக்கை நாங்கள் பொய்யாக தயாரித்து தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அது பொய்யானது என்றால் சரியல்ல.

2)எங்கள் இடத்திற்கு அருகில் கொட்டாய்கள் உள்ளது. மேற்படி என் கணவரை இழுத்து சென்ற போது நாங்கள் யாரும் காப்பாற்ற முயற்சி செய்யவில்லை என்றால் எதிரிகள் 7 பேர் இருக்கும்போது நாங்கள் என்ன செய்ய முடியும். மேற்படி கயிறை வைத்து என் கணவரை காப்பாற்ற நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றால் அந்த நேரத்தில் கயிற்றை எங்கு தேடுவது என்று சொல்கிறார். மேற்படி 5 ம் எதிரியை தாக்கிய குற்ற வழக்கில் நாங்கள் தப்பிப்பதற்காகவும், சிவில் வழக்கில் ஜெயிப்பதற்காகவும், நாங்களாக ஒரு பொய்யாக வழக்கை புனைந்து தவறாக இவ்வழக்கு நடத்தி வருகிறோம் என்றும்,

இவ்வழக்கு பொய்யானது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**ASSISTANT SESSIONS JUDGE**,
**Attur**.

SC No.396 /2018

Dated : 6-2-2023

Time: 11.35 am to 12.01pm

P.W. - 2 (LW-1) சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

( 1 முதல் 7 எதிரிகள் வழக்கறிஞருடன் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர்.

1)21-9-2014 அன்று 5 ம் எதிரி துரைசாமி இரவு 10 மணியளவில் 2 ம் எதிரி மாதேஸ்வரன் வீட்டில் தன்னுடைய அலைபேசியை சார்ஜ் செய்வதற்காக கொடுத்திருந்தார் என்றால் அது தவறு. சம்பவத்தின் போது ஆஜர் எதிரிகள் 7 பேரும் இருந்தார்கள். இவ்வழக்கிற்கு முன்பாக நான் 2 ம் எதிரி மாதேசை அதே தேதியில் தாக்கினேன் என்றும், அதை 5 ம் எதிரி துரைசாமி கேட்டதற்கு அவரையும் நான் தாக்கியதாக என் மீதும் என் குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் மீதும் குற்ற எண் 448/2014 என்ற முதல் தகவல் அறிக்கை தலைவாசல் காவல் துறையில் பதியப்பட்டது என்றால் அது பொய் வழக்கு. அந்த வழக்கில் நாங்கள் அனைவரும் முன்ஜாமீன் வாங்கினோம் என்றும், என் நண்பர் சுப்ரமணி என்பவர் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான்.

2)மேற்படி சம்பவத்தில் துரைசாமி சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார் என்றால் சரிதான். ஆனால் அவர் மருத்துவமனையில் சேர்ந்தாரா இல்லை என்று தெரியாது. சம்பவ இடத்திற்கும் ஆத்துார் அரசு மருத்துவமனைக்கும் சுமார் 10 கி மீ துாரம் இருக்கும். சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து காவல் துறையினர் என்னிடம் வாக்கு்முலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அது காலை 8-30 மணி மற்றும் மதியம் 1-00 மணியில் லேப்டாப்பில் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலம் சுமார் 1/2 மணி நேரம் இருக்கும். அதை நான் படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன்.

3) என்னுடைய வாக்கு்முலத்தில் என்னைத்தான் அடித்து இழுத்து சென்று எதிரிகள் கிணற்றில் தள்ளி விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை என் தகப்பனாரைத்தார் அவ்வாறு கிணற்றில் தள்ளினார்கள். மேற்படி லேப் டாப்பில் பதிவு செய்யப்பட்டதை பிரிண்ட் எடுத்து படித்துக் காண்பித்தார்கள். அதிலும்

என்னை கிணற்றில் தள்ளி விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை என் தகப்பனாரைத்தான் அவர்கள் கிணற்றில் தள்ளினார்கள். லேப்டாப்பில் பதிவு செய்து என் முன்னிலையில் பிரிண்ட் எடுத்தார்கள். ஆத்தூர் அரசு மருத்துவமனையில் நான் சொன்ன விவரங்களைத்தான் மருத்துவர் குறித்து கொண்டார். எங்கள் வீட்டிற்கும் நான் சொல்லும் கிணற்றுக்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும். மேற்படி எங்கள் வீட்டிற்கு மேல்புரம் தென்வடலாக பாதை செல்கிறது என்றால் சரிதான். பாதைக்கு கீழே வடபுறம் ஓட்டு வீடும் தென்புறம் கூரை வீடும் உள்ளது . அவை இரண்டிற்கும் வடக்கு பார்த்த வாசல். என்னுடைய வீட்டிற்கு வடபுறம் 5ம் எதிரியின் வீடு இல்லை. நான் சொல்லும் கிணறு சதுர கிணறு. அந்த கிணற்றுக்கு கீழே 10 அடி ஆழத்திற்கு சுற்று சுவர் உள்ளது. அந்த கிணற்றின் மேற்கில் மோட்டார் தொங்குவதற்கு ஒரு கிரேன் வைத்துள்ளது.

4) சம்பவ சமயத்தில் கிணற்றில் சுமார் 40 அடி அளவுக்கு தண்ணீர் இருந்தது. மேற்படி சம்பவத்தின்போது எங்கள் குடும்பத்தின்ர் இருந்தோம். மேற்படி கிணற்றில் விழுந்த என் தகப்பனாரை துாக்க முயற்சி எதுவும் எங்கள் குடும்பத்தார் செய்யவில்லை. நான் அடிப்பட்டு கீழே விழுந்து விட்டேன். தீயணைப்பு துறை சுமார் முக்கால் மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மேற்படி உண்மையில் எதிரிகள் என் தகப்பனாரை அடித்து கிணற்றில் தள்ளியிருந்தால் அவரை நாங்கள் காப்பாற்ற முயற்சி செய்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால்தான் முயற்சி செய்யவில்லை என்றால் அது தவறு. எங்களிடம் ஆள்பலம் இல்லை. நான் என்னுடைய வியாாரத்திற்காக 1ம் எதிரி என் மாமாவிடம் இருந்து சுமார் 40 லட்சம் கடன் வாங்கியிருந்தேன் என்றால் அது தவறு ரூ4 லட்சம் மட்டும் கடன் வாங்கினேன். மேற்படி கடனுக்காக நான் 1ம் எதிரிக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன்.

5)மேற்படி கடனில் பகுதி சாந்தி என்பவர் கொடுத்திருந்தால் அவர் பெயருக்கு 1ம் எதிரி கிரையப்பத்திரம் ஏற்படுத்தி கொடுத்து விட்டார் என்றால் எனக்கு தெரியாமல் கிரையம் செய்து கொடுத்துள்ளார். அதை எதிர்த்து நான் அசல் வழக்கு எண் 160/2013 என்ற வழக்கை 1ம் எதிரி மற்றும் சாந்திக்கு எதிராக தாக்கல் செய்திருக்கிறேன். 1ம் எதிரியின் பணத்தை ஏமாற்றுவதற்காக நான் அவரை தாக்கி விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக புகாரை கொடுத்துள்ளேன் என்றால் அது தவறு. மேற்படி 5ம் எதிரி எங்களால் தாக்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பிறகு பின்னிட்டு நாங்கள் இப்புகாரை

தயாரித்துக்கொண்டோம் என்றால் அது தவறு,. இவ்வழக்கு தாக்கல் செய்தவுடன் 1 ம் எதிரி அரசு வேலையிலிருந்து சஸ்பென்ட் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் சொல்வது போன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கு தொல்லை கொடுக்கும்நோக்கில் மற்ற எதிரிகளை பொய்யாக வழக்கில் சேர்த்து தவறாக வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கணிணியில் தட்டச்சு செய்ததாக அதை என்னிடம் படித்து காண்பித்ததாக சொல்வதும் பொய்யான சங்கதி என்றால் சரியில்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் யாதொரு சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**ASSISTANTSESSION JUDGE,**
**Attur.**